**செ.வெ. எண்:333** **நாள்: 09.06.2012**

<u>**பத்திரிக்கை செய்தி**</u>

மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக மாநில அளவில் சிறப்பாக புணிபுரிபவர்கள் மற்றும் நிறுவனங்களை தேர்வுக் குழு மூலம் தேர்வு செய்து, இவர்களை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களால் ஊக்குவித்து கௌரவிக்கப்படுவதால், அதனை கண்டு தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு மாற்றுத் திறனாளிகளுக்கான தொண்டு நிறுவனங்கள் மற்றும் மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக பணிபுரிபவர்கள் மேலும் சிறப்பாக பணிபுரிய வேண்டும் என்ற எண்ணம் ஏற்படுத்துவதற்காக, கீழ்காணும் விருதுகள் சுதந்திர தின விழா 15 ஆகஸ்டு 2012 அன்று வழங்கப்படுகின்றன.

| வ.எண் | விருதின் வகை | விருது விவரம் |
|---|---|---|
| 1. | மாற்றுத் திறனாளிகளுக்கு மிக அதிக அளவில் வேலைவாய்ப்பு அளித்த தனியார் நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 2 | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த தொண்டு நிறுவனம் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் ரூ. 50,000/– ரொக்க பரிசு |
| 3 | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறப்பு சமூகப்பணியாளர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் |
| 4 | மாற்றுத் திறனாளிகளுக்கு சேவை புரிந்த சிறந்த மருத்துவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |
| 5 | மாற்றுத் திறனாளிகள் நலனுக்காக அரும்பணியாற்றிய சிறந்த மாவட்ட ஆட்சித் தலைவர் | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம், சான்றிதழ் மற்றும் ரூ. 25,000/– ரொக்க பரிசு (மாவட்ட ஆட்சியர் மாநாட்டில் வழங்கப்படும்) |
| 6 | சிறந்த மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி | 10 கிராம் எடையுள்ள தங்கப் பதக்கம் மற்றும் சான்றிதழ் |

மேற்காணும் விருதுகள் பெற, முதன்மைச் செயலாளர் /மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், நேரு உள்வட்ட சாலை, கே.கே. நகர், சென்னை 78 அல்லது அந்தந்த மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர் அவர்களிடம் விண்ணப்பம் பெற்று விண்ணப்பங்கள் மற்றும் சான்றுகளுடன் மாற்றுத் திறனாளகள் நல அலுவலரிடம் பரிந்துரை பெற்று முதன்மைச் செயலாளர் /மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் அவர்களுக்கு 5.07.2012 க்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**